3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். (குறுக்கீடு) இது முடிந்தவுடன், நான் அதை எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். (குறுக்கீடு) நன்றிதான் சொல்லப் போகிறார்கள். ஒரு வரியில் நன்றி சொல்வார்கள். அதற்குப் பிறகு எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களைத் தேடி மருத்துவம்', 'மக்களைத் தேடி கல்வி' என்பன போன்று தற்போது 'மக்களைத் தேடி கிராமச் செயலகம்'. இந்தியாவின் வரலாற்றில் எந்தவோர் அரசும் இதுபோன்ற ஒரு திட்டத்தை அறிவித்ததாக நான் படித்ததில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், 1 இலட்சத்து 19 ஆயிரம் உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கான அமர்வுப் படித் தொகை 10 மடங்கு, 5 மடங்கு உயர்வு, 388 ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு வாகன வசதி, ஏனைய அனைத்து வசதிகளுடன்கூடிய கிராமச் செயலகம் என இன்றைக்கு மிகச் சிறப்பான அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த அறிவிப்பின் ஊடாக, ஓர் அரசு எந்த நோக்கத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்படுகிறதோ, அந்த நோக்கம் கடைக்கோடி கிராமம் வரையிலும் சென்றடையக்கூடிய வகையில், அந்தக் கிராமத்திலேயே பஞ்சாயத்துத் தலைவருக்கு அலுவலகம், கிராம நிருவாக அலுவலர் அமர்ந்து பணி செய்வதற்கு அலுவலகம், ஊராட்சிச் செயலாளர் அமர்ந்து பணி செய்வதற்கு அலுவலகம் என ஒரு mini தலைமைச் செயலகமே கிராமத்திற்குச் சென்று செயல்படுவதற்கான ஒரு வாய்ப்பை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கின்ற, விதி 110–ன்கீழான இந்த அறிவிப்பு ஒரு மகத்தான அறிவிப்பு. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற 1 இலட்சத்து 19 ஆயிரம் மக்கள் பிரதிநிதிகளும் மகிழ்ச்சியடையக்கூடிய அறிவிப்பு. தமிழ்நாட்டில் வாழ்கின்ற 7 கோடி மக்களுடைய பிரச்சினைகளையும் கேட்டு, உள்வாங்கி, செயல்படுகின்ற அறிவிப்பு. இந்த மகத்தான அறிவிப்பைத் தமிழக வாழ்வுரிமை கட்சியின் சார்பாக மனதார

2022 ஏப்ரல் 22] [திரு. தி. வேல்முருகன்]

வரவேற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *காலத்தின் அருமை கருதி, மாண்புமிகு உறுப்பினர்கள் சுருக்கமாக நன்றி சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவம்பர் 1–உள்ளாட்சிகள் தினம் என்கின்ற அறிவிப்பு; மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்ட தினமும் நவம்பர் 1 ஆம் தேதிதான். இந்த இரண்டு தேதியும் ஒத்துப்போகிறது. மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்ட தினம் நவம்பர் 1; உள்ளாட்சிகள் தினமும் நவம்பர் 1. எனவே, மிகச் சிறப்பான அறிவிப்பாக நான் இதைப் பார்க்கிறேன். உள்ளாட்சிகள் தினம் கொண்டாடப்படுவது இடையிலே நிறுத்தப்பட்டிருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை மீண்டும் கொண்டாடுவதற்கான வழிவகைகளைச் செய்திருக்கிறார்கள்.*

அதேபோன்று, உள்ளாட்சிப் பிரதிநிதிகளிடத்திலே தற்போது சிறிய தொய்வு ஏற்பட்டிருந்தது. அவர்களை யாரும் கண்டுகொள்ளவில்லை என்கின்ற குறை இருந்தது. அதைக் களையும் வகையில், இன்றைக்கு அவர்களுடைய படிகளை உயர்த்தி, வாகனங்களைக் கொடுத்து, அந்தத் தொய்வைப் போக்கி, அவர்கள் வேகமாகச் செயல்படுவதற்கான வாய்ப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

சட்டமன்றத்தில் இயற்றப்படுகின்ற எந்தச் சட்டமாக இருந்தாலும், எந்தச் சலுகையாக இருந்தாலும், அவை உள்ளாட்சிகளின் மூலமாகத்தான் மக்களிடத்தில் சென்று சேர முடியும் என்பதைப் புரிந்துகொண்டு, இந்த அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. அதேபோன்று, உள்ளாட்சிப் பிரதிநிதிகளோ அல்லது அதிகாரிகளோ மட்டுமல்ல, மக்களும் இதிலே பங்குகொள்ள வேண்டும் என்று கிராம சபைக் கூட்டங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியதன் மூலமாக கிராமங்களிலே மக்கள் கேள்விகளைக் கேட்பதற்கான வாய்ப்புகளை அதிகப்படுத்தி, நிர்வாகத்தைச் சீர்படுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றி கூறி, இந்த அறிவிப்பை கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன்.

[2022 ஏப்ரல் 22

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள்.*

முற்பகல் 11–35

திரு. ப. அப்துல் சமது: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 110 விதியின்கீழ் அறிவிப்பு என்று சொன்னாலே தமிழக மக்கள் மகிழ்ச்சியில் குதூகலிக்கக்கூடிய அறிவிப்புகளாகத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துக் கொண்டேயிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் ஆட்சி சிறந்த ஆட்சி என்பதற்கான மிக முக்கியமான ஓர் உதாரணம், அந்த ஆட்சியினுடைய பலன்கள் அந்த நாட்டில் வாழக்கூடிய அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சென்று சேர்வதுதான். அதிலே, மிக முக்கியமாகக் கிராமங்களுடைய வளர்ச்சிதான் ஓர் ஆட்சியினுடைய சிறந்த முன்மாதிரியாக இருக்கும். அந்தக் கிராமங்களை வளர்த்தெடுப்பதற்காக இன்றைக்கு அறிவித்திருக்கக்கூடிய 'உள்ளாட்சிகள் தினம்' என்கின்ற இந்த அறிவிப்பு மிக முக்கியமானதாக இருக்கின்றது. மக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டவும், வெளிப்படைத்தன்மையைக் கொண்டு வரவும், மக்கள் பங்கேற்பை அதிகரிக்கவும், ஆண்டுக்கு 6 கிராம சபைக் கூட்டங்களை நடத்துவதாக அறிவித்திருப்பது என்பதும் மக்களுக்கு இன்னும் அந்தப் பகுதியிலே, பல்வேறு நலத் திட்டங்களை கொண்டு வருவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

உள்ளாட்சிப் பிரதிநிதிகளில், சிறப்பாகச் செயல்படக்கூடிய பிரதிநிதிகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு 'உத்தமர் காந்தி' விருது வழங்குவது என்பது அவர்களுடைய செயல்பாட்டை இன்னும் அதிகரிப்பதற்கான ஓர் அருமையான திட்டம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அருமையான திட்டங்களைத் தொடர்ந்து அறிவித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வாழ்த்தி, ஒன்றிய பெருந்தலைவர்களுக்கெல்லாம் வாகனங்களை மீண்டும் வழங்குவதற்கான இந்த அறிவிப்பு வரவேற்கக்கூடிய ஒன்று. அடுத்ததாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இதுபோன்று வாகனங்களை வழங்குவதற்கான அறிவிப்பை 110 விதியின்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல பல அறிவிப்புகளை வழங்கியிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, நிறைவு செய்கிறேன். நன்றி.

2022 ஏப்ரல் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், 110 விதியின்கீழ் ஊராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும், மாவட்ட கவுன்சிலில் உள்ள உறுப்பினர்களுக்கும், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களுக்கும் அமர்வுப் படியை உயர்த்தியும், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கு வாகன வசதியை செய்து கொடுத்திருப்பதும் மற்றும் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தி, கிராமத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தி, கிராம மக்களின் வாழ்க்கையில் வசந்தத்தைக் கொண்டு வருவதற்காக எடுத்திருக்கின்ற முயற்சிக்கும், அறிவித்திருக்கின்ற அறிவிப்புகள் மகிழ்ச்சியைத் தருவதாக இருக்கின்றன. கிராமங்களின் வளர்ச்சிக்கு இது ஓர் அடிகோலாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, இந்த அறிவிப்புகளை அறிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என் நெஞ்சம் நிறைந்த நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் கொஞ்சம் அமைதியாக இருந்தால் நல்லது.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டினுடைய வளர்ச்சி என்பது கிராமப்புறங்களில் இருக்கிறது என்பதை அறிந்து, வரலாற்றுச் சிறப்புமிக்க பல்வேறு அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதை வரவேற்கின்றேன். குறிப்பாக, நவம்பர் 1 ஆம் தேதியை, உள்ளாட்சிகள் தினமாகவும், கிராம சபைக் கூட்டம் வருடத்திற்கு 4 நாட்கள் நடைபெறுவதை 6 நாட்களாக அதிகரித்திருப்பதும், உள்ளாட்சி அமைப்புகளினுடைய பிரதிநிதிகளுக்கு அமர்வுப் படியை 5 மடங்கு உயர்த்தியிருப்பதும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்குப் புதிய வாகனங்கள் வழங்குவதும், சிறந்த முறையிலே செயல்படுகின்ற கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு 'உத்தமர் காந்தி விருது' வழங்கப்படும் என்ற அறிவிப்பும், கிராமச் செயலகங்களுக்கு 600 அலுவலகங்கள் கட்டுதல் உள்ளிட்ட சிறந்த அறிவிப்புகளை வெளியிட்டமைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன்.*

[2022 ஏப்ரல் 22

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இந்தியாவின் இதயம் கிராமப்புறங்களில்தான் இருக்கிறது' என்று மகாத்மா காந்தி அவர்கள் சொன்னார்கள். அதைப் புரிந்துகொண்டு, உணர்ந்துகொண்டுதான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவதற்காக 110 விதியின்கீழ் இந்த அறிவிப்புகளை அறிவித்திருப்பதாக நான் பார்க்கிறேன். அந்தவகையில், எப்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருகிறதோ அப்போதெல்லாம்தான் தமிழகத்திலே உள்ளாட்சி அமைப்புகள் வலுவாகச் செயல்பட்டிருக்கிற வரலாற்றை நாம் பார்க்கிறோம். அந்தவகையில், உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்த, மக்கள் பங்களிப்பை உள்ளாட்சி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையோடு செயல்படுத்த 110 விதியின்கீழ் அறிவிப்புகளை அறிவித்திருக்கின்றார்கள். அதாவது, 6 முறை கிராம சபைக் கூட்டம்; உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கான அமர்வுப் படி உயர்வு; அனைத்து ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்குப் புதிய வாகனங்கள் வழங்குதல்; சிறப்பாகச் செயல்படக்கூடிய கிராம ஊராட்சிகளுக்கு 10 இலட்சம் ரூபாய் வழங்குதல் போன்ற அறிவிப்புகள், பாராட்டக்கூடியவை. இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஊராட்சிகளில் 'கிராமச் செயலகங்கள்' உருவாக்குவது உள்ளிட்ட உள்ளாட்சி நிருவாகத்தை, உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்தக்கூடிய வகையில், விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற இந்த அறிவிப்புகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மனதார வரவேற்கின்றோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நாங்கள் வாழ்த்துகிறோம்.

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசம் அமுத விழாவினைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. இன்று, மாண்புமிகு முதல்வர், சமத்துவ நாயகர், உடன்பிறப்பு என்கிற சொல்லின் உயிர் வடிவமாக நம்மை

2022 ஏப்ரல் 22] [திரு. ம. சிந்தனை செல்வன்]

வழிநடத்திக் கொண்டிருக்கின்ற தமிழ்ச் சமூகத்தின் தலைவர் அவர்கள், விதி 110–ன்கீழ் அறிவித்திருக்கின்ற அறிவிப்புகள் என்பது, வரலாற்றின் பக்கங்களில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய ஓர் அறிவிப்பாகும். இது ஒட்டுமொத்த ஆட்சி நிருவாகம் தொடர்பான பார்வையைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டிருக்கின்றது. கோட்டையிலேயிருந்து மக்களைப் பார்க்கிற அந்தப் பார்வையிலிருந்து மாறி, குடிசையிலேயிருந்து கோட்டையைப் பார்க்கிற அந்தப் பார்வைக்கு இந்த ஆட்சி நிருவாகத்தை மாற்றியிருக்கிறது. ஆகவே, அவர் சொல்லியிருக்கிற அத்தனை அம்சங்களையும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே நெஞ்சார பாராட்டுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் சொன்னதைப்போன்று, 'கிராமச் செயலகம்' என்கிற அந்தச் சொல் வெறும் சொல்லோ, அறிவிப்போ அல்ல. இந்திய வரலாற்றில் இது பிற்காலத்தில் மிக புரட்சிகரமான ஓர் அறிவிப்பாக நிச்சயம் உணரப்படும். இதனுடைய விளைவுகளை மிக விரைவிலே நம்மால் பார்க்க முடியும். இதுதான் 'திராவிட மாடல்' என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வினாடியும் உணர்த்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

*__திரு. நயினார் நாகேந்திரன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகளுக்கு வலுசேர்க்கின்ற வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் அறிவித்திருக்கின்ற அறிவிப்புகளை நான் மனதார வரவேற்கிறேன். அதேநேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பார்வை ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து சேர்மேன்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் வரையிலும் வந்திருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் வரையிலும் அந்தப் பார்வை M.L.A.–க்கள் பக்கம் வரவில்லை என்கிற எண்ணம், ஆதங்கம் (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோரிடத்திலும் இருக்கின்றது. அங்கேயும் இருக்கின்றது; இங்கேயும் இருக்கின்றது. எனக்குக்கூட வேண்டாம். தேவைப்படுகின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நீங்கள் ஒரு கார் கொடுத்து உதவினால் மிகவும் நன்றாக இருக்கும். அதை சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

[திரு. நயினார் நாகேந்திரன்] [*2022 ஏப்ரல் 22*

ஊராட்சி அமைப்புகளுக்கு இவ்வளவு அதிகாரம் கொடுக்கின்ற அதே நேரத்தில், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து தலைவர்கள் சொல்கிற கருத்தைச் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டு, செவிமடுக்கின்ற வகையில், அந்த அதிகாரிப் பெருமக்களுக்கு ஓர் அறிவிப்பையும் கொடுக்க வேண்டும். அதேநேரத்தில் கழிவு நீரோடை மற்றும் water tank *போன்றவற்றை ஊராட்சி மக்கள் பிரதிநிதிகள் கட்ட வேண்டுமென்று சொன்னால், நிதி தேவைப்படுகிறது. இவ்வளவு வலுசேர்க்கின்ற, இவ்வளவு அதிகாரம் கொடுக்கின்ற அந்த மக்கள் பிரதிநிதிகளுக்கு மேற்கண்ட பணிகளைச் செய்வதற்கான நிதியையும் நீங்கள் வழங்க வேண்டும். நிச்சயமாக, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அரசு சார்பிலோ அல்லது முடிந்த அளவுக்கு அவர்களுக்கு வட்டியில்லாமல் கடன் வழங்குகின்ற வகையிலாவது ஒரு கார் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகளை வரவேற்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் மத்திய அரசிடம் பரிந்துரை செய்து, அதற்கான நிதியை வாங்கிக் கொடுத்துவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கிராம ராஜ்யம், ராம ராஜ்யம்' என்று சொல்லப்பட்டது. கிராமத்தினுடைய வளர்ச்சிதான் ஒரு நாட்டின் வளர்ச்சி என்று சொல்லப்பட்டு வந்தது. அந்த அடிப்படையில், அமரர் ராஜிவ் காந்தி அவர்களால் பஞ்சாயத்து ராஜ் சட்டம் கொண்டுவரப்பட்ட நேரத்தில், தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்த வேண்டும்; இதில் எப்படிப்பட்ட சீர்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்கின்ற நேரத்தில், அன்றைய முதலமைச்சராக இருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதை நடைமுறைப்படுத்துவதற்கு அச்சாரம் இட்டவர் இன்றைய முதலமைச்சர், அன்றைய உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தவர் என்பதை நான் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அடிப்படையில், இன்று மாண்புநிறை முதலமைச்சர் அவர்களால் விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டிருக்கின்ற அறிவிப்புகள் என்பது உள்ளாட்சிப் பிரதிநிதிகள், குறிப்பாக, ஊராட்சி மன்றத் தலைவர்கள் மட்டுமல்லாது எல்லா உள்ளாட்சிப் பிரதிநிதிகளும்*

2022 ஏப்ரல் 22] [திரு. ஜி.கே. மணி]

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்ற உணர்வு மட்டுமல்ல, அவர்கள் சரியாக செயல்பட வேண்டுமென்ற உணர்வைத் தூண்டுகிற வகையில் இந்த அறிவிப்பு அமைந்திருக்கிறது என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாக முடியுங்கள்.

திரு. ஜி.கே. மணி: சுருக்கமாக முடித்துவிடுகிறேன். பொதுவாக, இந்திய நாட்டில் மத்திய அரசு ஓர் ஆட்சி அமைப்பு முறை, மாநில அரசு ஓர் ஆட்சி அமைப்பு முறை; இவற்றையெல்லாம் கடந்து, உள்ளாட்சி என்பது, ஓர் ஆட்சி அமைப்பின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும்; அதிகாரத்தைப் பெற வேண்டும். உள்ளாட்சிதான், நல்லாட்சி என்று மாண்புநிறை முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆகவே, அதனடிப்படையில், நாடாளுமன்றச் செயலகம், மாநில அரசு செயலகம் என்பதைப்போல, கிராமச் செயலகம் துவங்கியிருப்பது, இந்திய திருநாட்டில் தமிழ்நாடுதான் முதன்மையாக இருக்குமென்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில், இது இந்திய நாட்டுக்கு வழிகாட்டக்கூடிய ஓர் அறிவிப்பாகவே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் பார்க்கிறேன். ஆகவே, இந்த அறிவிப்பு நடைமுறைக்கு வந்தால், உள்ளாட்சி அமைப்புகள் சிறப்பாக அமையும். காரணம், பொது மக்கள் அனைவரின் அன்றாடத் தேவைகளை, அடிப்படைத் தேவைகளை தினந்தோறும் அணுகுவது உள்ளாட்சி அமைப்புகள்தான். ஆகவே, உள்ளாட்சி அமைப்புகள் சிறப்பாக நடைபெற்றால், நாட்டில் நல்லாட்சி நடைபெறும் என்பதற்கு இலக்கணமாக, மாண்புநிறை முதலமைச்சர் அவர்களால் விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்று, பாராட்டி அமர்கிறேன்.

அதேநேரத்தில், இங்கே வேண்டுகோள் ஒன்றை வைத்திருக்கிறார்கள். இன்று ஊராட்சிச் செயலகம் துவக்கப்படுகிறது, பல மாவட்டங்களில் மாவட்ட ஊராட்சி அலுவலகத்திற்குக் கட்டடங்கள் இல்லையென்று சொல்கிறார்கள். அதையும் நிறைவேற்ற வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, வரவேற்று அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று அறிவித்திருக்கின்ற அறிவிப்பை காங்கிரஸ் பேரியக்கம் மனதார வரவேற்கிறது; வாழ்த்துகிறது; நன்றி சொல்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று அரசின் முதலமைச்சராக, இந்த கிராம சபைக்கு உயிரூட்டும்விதமாக பல அறிவிப்புகளைச் செய்திருக்கிறார். அவர் மக்களின் முதல்வராக இருந்தபோதும் கிராம சபைக் கூட்டங்களிலே கலந்துகொண்டு உயிர்ப்பித்திருக்கிறார். இப்பொழுது 6 தினங்கள் அதாவது, குடியரசு தினம், தொழிலாளர் தினம், சுதந்திர தினம், காந்தி ஜெயந்தி–காமராஜர் இறந்த தினம், உலக தண்ணீர் தினம், உள்ளாட்சிகள் தினம் ஆகிய 6 தினங்களில் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், வரவேற்புக்குரியது; வரலாற்றுப் புகழ்பெற்றது. இவையெல்லாம் இன்றைக்குத் தேவையான ஒன்று. இன்று புவி நாள். Earth Day–ஐ நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இந்தப் புவி நாளில் தண்ணீர் தினத்திற்கும் நாங்கள் கிராம சபையைக் கூட்டுவோம் என்பது, மிகவும் சிறப்பாக இருக்கிறது. 1,19,000 ஊரக ஊராட்சித் தலைவர்கள் பயன்பெறும் வகையில், அவர்களை ஊக்கப்படுத்தவும், உற்சாகப்படுத்தவும் பல அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

மகாத்மா காந்தியடிகள், உள்ளாட்சி அமைப்புகளில் கட்சிகள் அற்ற ஜனநாயகம் தேவையென்று அவர் உள்ளாட்சிகளைப் பற்றிப் பேசியிருக்கிறார். கட்சிகள் அற்ற ஜனநாயகத்தை கிராமங்களிலே நாம் கடந்த காலங்களிலே பார்க்க முடிந்தது. அதேபோன்று பஞ்சாயத்து ராஜ் சட்டம் திரு. ராஜிவ் காந்தி அவர்கள் கொண்டு வந்தார்கள். கட்சி பேதமில்லாமல் பஞ்சாயத்து ராஜ் சட்டத்தை எடுத்துச் செல்ல வேண்டுமென்பது அவருடைய கனவு. இன்று மகாத்மா காந்தி அவர்களுடைய கனவையும், எங்கள் தலைவர் திரு. ராஜிவ் காந்தி அவர்களின் கனவையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஊக்குவித்திருக்கிறார்கள்; உற்சாகப்படுத்தியிருக்கிறார்கள். இதை மனதார நாங்கள் வரவேற்கிறோம். அதேபோன்று, ''உத்தமர் காந்தி கிராம ஊராட்சி விருது'' என்று அறிவிப்பு செய்திருப்பதை நாங்கள் மனதார வாழ்த்துகிறோம். இன்று நாம் புவி நாளைக் கொண்டாடிக்

2022 ஏப்ரல் 22] [திரு. கு. செல்வபெருந்தகை]

கொண்டிருக்கிறோம். கடந்த காலங்களிலே கிராம சபைக் கூட்டத்தைக் கூட்டும்போதெல்லாம், எவ்வளவோ தடைக் கற்கள் வந்தன; அதை நடத்தவிடாமல் செய்தார்கள் என்பதை இந்த நாடறியும். ஆகவே, மகாத்மா காந்தியடிகள் பஞ்சாயத்து ராஜ். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மகாத்மா காந்தியடிகள் கட்சிகள் அற்ற ஜனநாயகம் என்று உள்ளாட்சி அமைப்புகளைப் பற்றிச் சொன்னார்கள். இன்றைக்கு இந்த அவையிலே, கட்சிகள் அற்ற ஜனநாயகத்தைப் பார்க்க முடிகிறது. எனக்கு செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. 'மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வலியுறுத்துங்கள்; உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு எப்படி அறிவித்தாரோ, அதேமாதிரி சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஏதாவது அறிவிப்பு செய்யுங்கள்' என்ற ஒரு கோரிக்கை வலுப்பெறுகிறது. இங்கேயும் கட்சிகள் அற்ற ஜனநாயகத்தை இன்று பார்க்க முடிகிறது. அதற்கும் மூலவராக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார். ஆக, இந்த அறிவிப்பை காங்கிரஸ் பேரியக்கம் மனதார வரவேற்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–50

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுக் காலமாக கவனிப்பாரற்றுக் கிடந்த உள்ளாட்சித் துறையில் ஒளிவிளக்கு ஏற்றுகின்ற வகையில் இன்றைக்கு 6 உன்னதமான திட்டங்களை அறிவிப்பாகக் கொடுத்து அதைச் சட்டமாக்கவிருக்கிறீர்கள். ஆகவே, அந்த வகையில் உள்ளாட்சித் துறையில் பயன்பெறக்கூடிய, அனைத்து கிராம ஊராட்சிகளுடைய உறுப்பினர்கள், தலைவர்கள், ஒன்றியக் குழுத் தலைவர்கள் அனைவரின் சார்பாகவும், குறிப்பாக ஒரு இலட்சத்து 19 ஆயிரம் மக்கள் பிரதிநிதிகள் சார்பாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, அவர்களோடு இணைந்து என்னுடைய நன்றியையும் நான் காணிக்கையாக்குகின்றேன். ஒன்றல்ல, இரண்டல்ல; எப்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்போதெல்லாம் உள்ளாட்சி அமைப்புகளில் சிறந்த நிர்வாகமும், வசதிகளும், வாய்ப்புகளும் உருவாக்கித் தரப்படுகின்றன என்பதை நாம் நன்கு உணர்வோம்.

[திரு. கே.ஆர். பெரியகருப்பன்] [2022 ஏப்ரல் 22

அந்த வகையிலேதான், 2007–ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்து, நீங்கள் துணை முதலமைச்சராக இருந்த நேரத்திலே, கொண்டாடப்பட்ட உள்ளாட்சிகள் தினம் தி.மு.க. ஆட்சிக் காலம் வரை நடைபெற்றது. பிறகு அது நிறுத்தப்பட்டுவிட்டது. இப்போது வருடத்திற்கு 6 முறை கிராம சபைக் கூட்டம் நடைபெறும் என்ற இந்த அறிவிப்பும் ஏற்கெனவே வருடத்திற்கு நான்கு முறை நடத்தப்படும் என்று அறிவித்ததும் நம்முடைய கழக ஆட்சியிலேதான். அதைப்போல உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கான அமர்வுப் படி, ஐந்து மடங்கு, 10 மடங்கு உயர்த்தி அறிவித்திருப்பது அவர்களுக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்திருக்கின்றது. அதைப்போல, மாண்புமிகு முதலமைச்சராக கலைஞர் அவர்கள் இருந்த காலங்களில், ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கு 385 வாகனங்கள் வழங்கப்பட்டன. நீங்கள் துணை முதலமைச்சராக இருந்தபோது அதைச் செய்தீர்கள். இடைப்பட்ட காலத்தில் அவர்களுக்கு வாகனம் பழுதடைந்த நிலையில் இருந்தது என்று பல்வேறு தலைவர்களும் கோரிக்கை வைத்தார்கள். அனைத்து ஒன்றியக் குழு தலைவர்களுக்கும் வாகனங்கள் வழங்கப்படும் என்று கடந்த 2018–2019, 2019–2020–ல் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அறிவிப்பு செய்யப்பட்டது. ஆனால் அறிவிப்பு, அறிவிப்போடு நின்றுவிட்டது. அந்தக் கோரிக்கையை நீங்கள் கனிவோடு பரிசீலித்து, இப்போது அறிவித்திருக்கிறீர்கள். ஆக, இப்படி எல்லா வகையிலும், 6 முத்தான அறிவிப்புகளை அறிவித்திருக்கிறீர்கள். எப்படி தமிழ்க் கடவுள் முருகனுக்கு 6 படைவீடு சிறப்பைப் பெற்றிருக்கிறதோ, அதைப்போல இந்தத் துறைக்குப் புத்துயிரூட்டியிருக்கின்ற இந்த 6 அறிவிப்புகளும் மக்கள் மத்தியிலே உங்களுக்கு மிகப் பெரிய செல்வாக்கை உருவாக்கித் தரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் வாகனப்படி 25,000 ரூபாய் வாங்கிக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு)

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

தமிழகத்தில் ஏற்படும் மின்தடை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.